**தலைப்பு 008 – தேசிய பொலிஸ் ஆணைக்குழு**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 008 – தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகளுடன் தொடர்பான தகவல்களும் உள்ளடங்களாக நிதிக்கூற்றுக்கள் மீதான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) பிரிவின் பிரகாரம் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2024 மே 15 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) பிரிவின் பிரகாரம் தேசிய பொலிஸ் ஆணைக்குழு தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2024 ஜூன் 25 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் நிதிக் கூற்றுக்களின் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) பிரிவின் பிரகாரம் ஆணைக் குழுவினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உப பிரிவின் பிரகாரம் ஆணைக் குழுவின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாவட்டச் செலயகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்குகு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2023 சனவரி 27 திகதிய இலக்கம் 01/2023 கொண்ட பாதீட்டு சுற்றறிக்கை பிரகாரம் 07 செலவுப் விடயங்களை தவிர ஏனைய அனைத்து மீண்டுவரும் செலவினங்களுக்கான மொத்த ஏற்பாட்டு கூட்டுத் தொகையின் குறைக்க பட்சம 6 சதவீதத்த்திற்கு சமனான ஏற்பாட்டு அளவினை பதிவழிக்க அனைத்து பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அறிவித்திருந்த போதும், பொலிஸ் ஆணைக்குழுவினால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கவில்லை. | அதிகரித்த கடமைபணிகளிற்கு தேவையான ஏற்பாடுகள் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கு 2023 ஆம் ஆண்டிற்காக வழங்கி இருக்காததால், பொது சேவை ஆணைக்குழுவிடமிருந்து நி.பி.208 இன் கீழ் ஏற்பாட்டை பெற்றுக் கொள்ளல் மற்றும் தேசிய வரவு செலவுத் திணைக்களத்திடமிருந்து குறைநிரப்பு ஏற்பாட்டை பெற்றுக் கொள்ள நேரிட்டது. எனினும், 2 சதவீத ஏற்பாட்டு அளவை குறைப்பதற்கு தேசிய வரவு செலவுத் திணைக்களம் வாய்மொழி மூலம் உடன்பட்ட அந்த ஏற்பாட்டு அளவை ITMIS தொகுதியினுள் திருத்தி இருக்கவில்லையென அறிவிக்கப்பட்டுள்ளது. | 2023 சனவரி 27 திகதிய இலக்கம் 01/2023 கொண்ட வரவு செலவு சுற்றறிக்கை பிரகாரம் அரச செலவினங்களை மிகவும் சிக்கனமாகப் பயன்படுத்த மற்றும் இயலுமான வரை தேவையற்ற செலவுகளைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும |
| (ஆ) | செலவின விடயங்கள 5 இற்காக நி.பி.208 இன் கீழ் கூட்டுத் தொகை ரூபா 5,755,825 ஆன மேலதிக ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. இதன் கீழ் ஏனைய கொடுப்பனவுகள் (1003) மற்றும் ஏனைய (1409) செலவு விடயத்திற்கு முறையே ரூபா 1,975,525 மற்றும் ரூபா 450,000 மேலதிக ஏற்பாடுகள் பெறப்பட்ட போதும், அவற்றில் முறையே ரூபா 475,000 மற்றும் ரூபா 384,000 வேறு செலவு விடங்களிற்கு மாற்றப்பட்டிருந்தன. | ஆளணியினர் சம்பளம் மற்றும் படிகள் செலுத்த தேவையான ரூபா 1,975,525 இனை நி.பி.208 இன் கீழ் செலவு விடய இலக்கம் 1003 இற்கு பெற்றுக் கொண்ட போதும், அத் தொகை முற்றாக முடிவடைந்தது. 1003 மற்றும் 1409 செலவு விடயத்தின் கீழ் ஆண்டிறுதியில் சேமிப்பாகும் என எதிர்பார்த்த ஏற்பாட்டு அளவை ஏற்பாடு அத்தியவஷியமான காணப்பட்ட செலவு விடயங்களிற்கு நி.பி. 66 இன் கீழ் மாற்றப்பட்டது. | ஏற்பாட்டு தேவைப்பாட்டை குறிப்பாக இனங்கண்டு மாற்றங்களை செய்ய வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்த்த பூர்த்தியாக்கல் மட்டத்தை பெற்றுக்கொள்ளாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| **(அ)** | **பொது மக்கள் முறைப்பாட்டு புலனாய்வு** | | |
| (i) | 2023 ஆண்டில் கிடைத்த 2448 பொது மக்கள் முறைப்பாடுகளில் 1887 பொது முறைப்பாடுகளின் அதாவது 77 சதவீத புலனாய்வுகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. மாகாண ரீதியாக கிடைத்த பொது மக்கள் முறைப்பாடுகளின் புலனாய்வின் மூலம் வருடத்தில் குறைந்தபட்சம் 25 சதவீத முன்னேற்றத்தை அடைய முடியாத மாகாணங்களின் எண்ணிக்கை 8 ஆகும். | 2023 ஆண்டில் கிடைத்துள்ள 561 பொது மக்கள் முறைப்பாடுகளுடன் 2016 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரை கிடைத்துள்ள 1090 பொது மக்கள் முறைப்பாடுகளின் புலனாய்வுகள் 2023 ஆண்டினுள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. ஊவா மாகாணத்திற்குரியதாக 129 பொது மக்கள் முறைப்பாடுகள் கிடைத்துள்ளதுடன், அவற்றில் 14 முறைப்பாடுகளில் புலனாய்வுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. எஞ்சிய முறைப்பாட்டு எண்ணிக்கையில் 102 முறைப்பாடுகளுக்கு ஊவா மாகாண அலுவலகத்தினால் மற்றும் 08 முறைப்பாடுகளுக்கு பிரதான அலுவலகத்தினால் பொலிஸ் புலனாய்வு அறிக்கைகள் கோரப்பட்டுள்ளன. | பொது மக்கள் முறைப்பாடுகளை புலனாய்வு செய்வதனை உச்ச மட்டத்திற்கு ஆக்கிக் கொள்ள வேண்டும். |
| (ii) | கிடைக்கப் பெற்ற பொது மக்கள் முறைப்பாடுகளின் தன்மையின பிரகாரம் மொத்த முறைப்பாடுகளில் அதிக சதவீதம் பொலிஸினால் செயற்படாமை, அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்துதல், பாரபட்சம் காட்டுதல் போன்ற தன்மையிலான முறைப்பாடுகள் ஆனதுடன், அவை மொத்த எண்ணிக்கையின சதவீதமாக முறையே சுமார் 33, 30 மற்றும் 18 ஆகும். அந்த முறைப்பாட்டு புலனாய்வினை பூர்த்தி செய்யும் முன்னேற்றம் முறையே 24, 25 மற்றும் 17 சதவீதம் ஆன குறைந்த சதவீதத்தில் இருந்தன. | பொது மக்களின் முறைப்பாடுகள் கிடைக்கின்ற திகதிக்கு அமைவாக புலனாய்வு ஆரம்பிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், முறைப்பாட்டின் தன்மைக்கு ஏற்ப வகைப்படுத்தி புலனாய்வை பூர்த்தி செய்வது தொடர்பில் செயற்படல் இதுவரை மேற்கொள்ளப்படாத போதும், முறைப்பாடுகளின் தன்மைக்கு ஏற்ப முன்னுரிமை வழங்கி புலனாய்வினை பூர்த்தி செய்ய குறித்த அலுவலர்களிற்கு அறிவுரை வழங்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | பொது மக்கள் முறைப்பாடுகளை புலாய்வு செய்வதனை உச்ச மட்டத்திற்கு ஆக்கிக் கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2023 டிசம்பர் 31 திகதியளவில் உச்ச நீதிமன்றம் மற்றும் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் 216 வழக்குகள் விசாரிக்கப்பட்டு வருவதுடன், அதற்கு மேலதிகமாக நிருவாக மேல்முறையீட்டு ஆணைய நீதிமன்றத்தின் கீழ் செயற்படும் 596 கோவைகள் நிலவுவதுடன், அவற்றில் 99 இற்கு மாத்திரம் அவதானிப்பு வழங்கப்பட்டிருந்தது. | அந்த வழக்குகள் தொடர்பான இறுதி தீர்ப்பை கௌரவ உச்ச நீதிமன்றம் அல்லது மேல்முறையீட்டு நீதிமன்றம் வழங்க வேண்டும். அவதானிப்பு வழங்கப்படாத வழக்குகள் தொடர்பில் விரைவில் அவதானிப்புக்களை வழங்க விஷேட வேலைத்திட்டம் ஒன்றை தயாரித்து நடைமுறைப்படுத்துவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது | விசாரிக்கப்பட்டு வரும் வழக்குகள் தொடர்பில் தேவையான அவதானிப்புகளை விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2023 ஆண்டில் ஆரம்பித்த 150 ஒழுக்காற்று கோவைகளில் 53 இன் அவதானிப்புக்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், அதன் முன்னேற்றம் சுமார் 35 சதவீதமாகும். அவற்றில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் தொடர்பாக உச்ச ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பான முறைப்பாடுகள் 82 கிடைத்துள்ளதுடன், அவற்றில் 23 முறைப்பாடுகளுக்கான தீர்ப்புகளை வழங்கியதன் மீது முன்னேற்றம் 23 வீதமான குறைந்த பெறுமானத்தை எடுத்திருந்தது. | ஒழுக்காற்று அதிகாரிகள் பொலிஸ் அலுவலர்களின் புலனாய்வு நடவடிக்கைகளை பொறுப்பேற்க தயக்கம் காட்டுவதை போன்றே, அதன் விசாரணை அலுவலர் ஒருவரினால் பல ஒழுக்காற்று விசாரணைகளை மேற்கொள்வதால் விசாரணை அதிகாரிகளை நியமிப்பதற்கு அதிக காலம் செல்லுதல், அறிக்கை தாமதித்தல் முன்னேற்றம் குறைவதற்கு காரணமாகவுள்ளது எனவும், ஒழுக்காற்று கோவைகளில் செயற்பாடுகள் முழுமையாக முடிக்கப்படவில்லை எனினும் அந்த கோவைகளின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பான முறைப்பாடுகளை விரைவில் விசாரித்து தீர்வுகளை வழங்க வேண்டும். |

## 3.2 நட்டங்களளும சேதங்களும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2023 ஆண்டில் 03 வாகனங்கள் விபத்துக்குள்ளாக இருந்த போதும், நிதி பிரமாணம் 110 இன் பிரகாரம், அந்த செய்யதிருக்காததுடன், சேதத்தின் பெறுமதி மற்றும் அந்த சேதங்களை காப்புறுதியினால் இழப்பீடு செய்வது தொடர்பான தகவல்கள் வெளியிடப்படவில்லை. | ஒரு விபத்து தொடர்பாக நிதிப் பிரமாணம் பிரகாரம் விசாரணை மேற்கொள்ளப்பட்ட போதும், தாமதத் தவறினால் சேத நட்டங்கள் பதிவேட்டில் பதிவு செய்யப்படவில்லை எனவும், மற்றைய 2 விபத்துகள் தொடர்பாக நி.பி.10 மற்றும் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க கணிப்பீட்டு சபையொன்று நியமிக்கப்பட்டுள்ளது உனவும், அந்த அறிக்கை கிடைத்தவுடன் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதி பிரமாணம் 110 பிரகாரம் சேதங்கள் தொடர்பில் சேதங்கள் மீதான பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும். |

### 3.3 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| தலைமையக பொலிஸ் பரிசோதகர் / பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பதவிக்கு தகுதி வாய்ந்த அலுவலரை தேர்ந்தெடுப்பதற்கான நேர்முகப் பரீட்சையொன்று 2023 ஆண்டு நடாத்தப்பட்டுள்ள போதும், பொலிஸ் மா அதிபரின் இலக்கம் DIG/HRM/OW/127/224 மற்றும் 2024 பெப்ரவரி 05 திகதிய கடிதத்தின் விடயங்களை கருத்தில் கொண்டு 2024 பெப்ரவரி 15 திகதி ஆணைக்குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் அந்த நேர்முகப் பரீட்சையை இரத்து செய்ய முடிவு செய்யப்பட்டு இருந்தது. இந்த நிலைமையில் 2023 மற்றும் 2024 ஆண்டுகளில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட தலைமையக பொலிஸ் பரிசோதகர் / பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நியமனங்கள் தொடர்பாக அலுவலர்களை தெரிவு செய்யும் போது ஒழுங்கான நடைமுறையொன்றை பின்பற்றி இருக்காததுடன், தலைமையக பொலிஸ் பரிசோதகர் / பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பதவிக்கு தகுதியான அலுவலர்கள் நியமிக்கப்படாமைக்கான வாய்ப்புகள் காணப்பட்டன. | DIG/ HRM/ OW/ 11127/ 2024 கொண்ட 2024/02/05 திகதிய கடிதம் மூலம் 2023 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பதவிக்கு தகுதியான அலுவலர்களை தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சையை இரத்து செய்யுமாறு பரிந்துரைத்து பொலிஸ் மா அதிபரினால் விடுக்கப்பட்டுள்ள கோரிக்கை தொடர்பில் அனைத்து விடயங்களையும் பரிசீலித்த பின்னர் அங்கீகாரம் வழங்க 2024/02/15 திகதி ஒன்றுகூடிய தேசிய பொலிஸ் ஆணைக்குழு தீர்மானித்ததாக 2024/02/20 திகதி பொலிஸ் மா அதிபரிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | முறையான நடைமுறையின் பிரகாரம் பதவி உயர்வு மற்றும் பதவிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. நல்லாட்சி

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2018 ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் பிரகாரம் ஆணையத்திற்கு உள்ளக கணக்காய்வு பிரிவொன்றை நிறுவி இருக்காததால், மீளாய்வாண்டில் உள்ளக கணக்காய்வு நடாத்தப்பட்டு இருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வாளர் பதவிக்கு அலுவலர் ஒருவரை இணைக்குமாறு நியமன அதிகாரியிடம் பல சந்தர்ப்பங்களில் கோரப்பட்ட போதும், அலுவலர் ஒருவரை வழங்காத காரணத்தால் உள்ளக கணக்காய்வு பிரிவை நிறுவ முடியாது போனதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | 2018 ஆண்டின் 19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40 பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட உதவிச் செயலாளர், பணிப்பாளர், பிரதான புலனாய்வு அதிகாரி, உள்ளக கண்காய்வாளர் ஆகிய பதிவிகளில் ஒரு அலுவலர் வீதம் வெற்றிடமாக காணப்பட்டது. | குறிப்பிடப்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை சரியானது என்பதுடன், குறித்த வெற்றிடங்களை விரைவில் நிரப்புமாறும் அந்த வெற்றிடங்கள் காரணமாக நிறுவனத்தின் செயற்பாடுகளை நடாத்திச் செல்வது பிரச்சினைக்கு உள்ளானது எனவும், குறித்த அதிகாரிகளிற்கு அவ்வப் போது பல சந்தர்ப்பங்களில் அறிவித்து கோரியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | சேயலாற்றுகையை மேம்படுத்துவதற்காக போதிய ஆளணியினரை இணைக்க வேண்டும். |
| (ஆ) | உதவி பணிப்பாளர் 08 பதவிகள் வெற்றிடமாக நிலவின. ஆணைக்குழுவின் பல்வேறு பிரிவுகளின் கீழ் தற்போது காணப்படும் முடிவுறுத்தப்படாத பொதுமக்கள் முறைப்பாடுகள், மேல்முறையீடுகள் மற்றும் ஒழுக்காற்று கோவைகளை விரைந்து முடிப்பதன் மூலம் தாமதத்தைத் தவிர்க்கவும், ஆணைக்குழுவை நிறுவிய நோக்கங்களை அடைந்து கொள்ள இப் பதவிகளை விரைவில் நிரப்ப வேண்டுமெனவும் வெற்றிடமாக காணப்படுவது ஆணைக்குழுவின் செயலாற்றளிற்கு கடுமையாக தாக்கம் செலுத்துவதாகவும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | குறிப்பிடப்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை சரியானது என்பதுடன், குறித்த வெற்றிடங்களை விரைவில் நிரப்புமாறும் அந்த வெற்றிடங்கள் காரணமாக நிறுவனத்தின் செயற்பாடுகளை நடாத்திச் செல்வது பிரச்சினைக்கு உள்ளானது எனவும் குறித்த அதிகாரிகளிற்கு அவ்வப் போது பல சந்தர்ப்பங்களில் அறிவித்து கோரியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | சேயலாற்றுகையை மேம்படுத்துவதற்காக போதிய ஆளணியினரை இணைக்க வேண்டும். |